**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், ஈரோடு**

**SCOP No.** 142/2025

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கிடுசாமி | வயது | : | 52/2026 |
| த/பெ. | : | கோடீஸ்வரன் | தொழில் | : | Lineman, EB |
| கிராமம் | : | மேட்டுக்காடு, குருமந்தூர் | தாலுகா | : | கோபிசெட்டிப்பாளையம் |
| மாவட்டம் | : | ஈரோடு | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 the day of 23.06.2026

**மனுதாரர் தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை**

நான் அசல் மனுவின் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் நிரூபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது சகோதரர் K.மணி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியாற்றினார். எனது சகோதரர் மணி திருமணமாகாதவர் மற்றும் அவர் இறக்கும் போது குழந்தைகளோ அல்லது உயிருடன் இருக்கும் பெற்றோர்களோ அவருக்கு இல்லை. எனது மற்றொரு சகோதரர் K.வேல்முருகனும் இறந்துவிட்டபடியால் தற்போது நான் மட்டுமே அவரது ஒரே சகோதரர் ஆவேன். நான் அவரது சொத்துக்கு வாரிசுரிமை பெற உரிமையுள்ள ஒரே சட்டப்பூர்வ வாரிசு ஆவேன். 25.05.2024 தேதியிட்ட எனது சகோதரர் K. மணி அவர்களின் இறப்பு சான்றிதழின் அசல் **ம.சா.ஆ.1.** 04.04.2025 தேதியிட்ட எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பின் நகல் **ம.சா.ஆ.2.** 21.07.2025 தேதியிட்ட எதிர்மனுதாரர் அனுப்பிய பதில் அறிவிப்பின் நகல் **ம.சா.ஆ.3.** எனது ஆதார் அட்டையின் நகல் **ம.சா.ஆ.4.** 11.07.2024 தேதியிட்ட K. மணி அவர்களின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் **ம.சா.ஆ.5.** 06.07.2022 தேதியிட்ட எனது சகோதரர் K.வேல்முருகன் அவர்களின் இறப்பு சான்றிதழின் நகல் **ம.சா.ஆ.6.** 25.07.2022 தேதியிட்ட வேல்முருகன் அவர்களின் வாரிசு சான்றிதழின் நகல் **ம.சா.ஆ.7.** 17.01.2004 தேதியிட்ட எனது தகப்பனார் கோடீஸ்வரன் அவர்களின் இறப்பு சான்றிதழின் நகல் **ம.சா.ஆ.8.** 06.02.2004 தேதியிட்ட எனது தகப்பனார் கோடீஸ்வரன் அவர்களின் வாரிசு சான்றிதழின் நகல் **ம.சா.ஆ.9.** 18.05.2009 தேதியிட்ட எனது தாயார் குஞ்சாயம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழின் நகல் **ம.சா.ஆ.10.** 12.10.2009 தேதியிட்ட எனது தாயார் குஞ்சாயம்மாளின் வாரிசு சான்றிதழின் நகல் **ம.சா.ஆ.11.** (ம.சா.ஆ.4, 6, 7, 8, 10, 11 அசலுடன் ஒப்பிடப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). மனுவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை** :

எனது இறந்த சகோதரர் மணியின் பணி பதிவேட்டில் பகுதி 2ல் சகோதரர், சகோதரிகள் என்ற இடத்தில் எந்த பெயரும் பதிவு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் சார்பாக கொடுத்த பதில் கடிதத்தில் மேற்குறிப்பிட்டது பற்றி சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு அது பற்றி ஞாபகம் இல்லை. இறந்து போன மணி என்பவரின் சர்வீஸ் மற்றும் டெர்மினல் பெனிபிட்ஸ் ஆகியவற்றை எனக்கு வழங்க காலஞ்சென்ற மற்றொரு சகேதாரர் வேல்முருகனின் குடும்பத்தினருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.06.23 15:52:19 +0530

என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வேல்முருகனின் குடும்பத்தினருக்கு நான் இறந்து போன மணி என்பவரின் சர்வீஸ் மற்றும் டெர்மினல் பெனிபிட்ஸ் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள ஆட்சேபனை இல்லை என்று காட்டுவதற்கு அவர்களை சாட்சிகளாக நான் விசாரிக்கலாம். ம.சா.ஆ.5 ல் நான் தான் மனுதாரர் ஆக இருந்து மணியின் வாரிசு சான்றிதழை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.5ல் பகுதி 2 'மனுதாரர் இச்சான்று தொடர்பாக தெரிவித்த எந்த ஒரு தவறான தகவல்களுக்கும் சான்று வழங்கும் அதிகாரம் பெற்ற அலுவலர் பொறுப்பல்ல' என்று தெரிவித்திருக்கிறார் என்றால் சரிதான். நான் மட்டும் தான் சட்டப்படியான வாரிசு இல்லை என்று தெரியவரும் பட்சத்தில் நான் இறந்து போன மணி என்பவரின் சர்வீஸ் மற்றும் டெர்மினல் பெனிபிட்ஸ் ஆகியவற்றை எதிர்மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ள இருக்கும் மணியின் சர்வீஸ் மற்றும் டெர்மினல் பெனிபிட்ஸ் ஆகியவற்றை வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேலும் நான் மட்டும் வாரிசுதாரர் இல்லை என்று தெரியவரும் பட்சத்தில் எதிர்மனுதாரர் எடுக்க இருக்கும் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளுக்கு நான் கட்டுப்பட்டவர் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் உரிய முறையில் உரிய ஆவணங்கள் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.06.23 15:52:26 +0530

Principal District and Sessions Judge,

Erode.